எனவே, முதல் அமைச்சர் அவர்கள் போலீஸ் மானியத்தின் மீது அவையில் வைத்த விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளது மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் கூறியது போல் எந்தவிதமான ஒழுங்குமுறையும் மீறியது ஆகாது என்ற எனது தீர்ப்பைக் கூறுகிறேன்.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, விசாரணைக் கமிஷன் என்பது, அரசாங்கத்திற்கு உதவி செய்வதற்காக, நடவடிக்கை எடுப்பதற்காக விரிவான அறிக்கை தரவேண்டும் என்ற நோக்கத்துடன் தான் விசாரணைக் கமிஷன் அமைக்கப் படுகிறது. அப்படியிருக்கும்போது, விசாரணைக் கமிஷன் அறிக்கை வரும் வரை அரசாங்கம் காத்திருக்க வேண்டும் என்பதுதான் பொருள். இதற்கு இடையில் அரசாங்கம் வேறு எந்த முடிவை தெரிவித்தாலும் அது கமிஷனின் நடவடிக்கையை பாதிக்கும். கமிஷன் என்பதே தேவையற்றதாகிவிடும். ஆகவே தான் இந்த விஷயம் ஒழுங்குப் பிரச்சினையாக வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்கட்சித் தலைவர் பேசியிருப்பதையும், முதலமைச்சர் பேசியிருப்பதையும் இதில் சொல்லியிருக்கிறேன். இதைப் பொறுத்தவரையில் ஒழுங்கு முறை மீறியதாக இல்லை என்று தெரிவித்து இருக்கிறேன். அது தான் என்னுடைய கருத்து.

(5) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) சென்னை தியாகராய நகர் பகுதியில் ஏற்பட்ட வெடி விபத்தினால் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னை தியாகராயநகர் பகுதியில் 4—3—78 அன்று ஏற்பட்ட பயங்கர வெடி விபத்தில் 4 பேர் கருகி மாண்டது சம்பந்தமாக எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை பற்றி விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டும் என்று கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் தீர்மானம் கொடுத்துள்ளனர் :—

1. திரு. மு. அம்பிகாபதி
2. திரு. கோ. இளங்கோவன்
3. திரு. ஜே. ஜேம்ஸ்
4. திரு. ஓ. சுப்பிரமணியம்
5. திரு. எஸ். அழகர்சாமி
6. திரு. எஸ். சிவசாமி
7. திரு. ஏ. ஆர். மாரிமுத்து
8. திரு. எம். எ. லத்தீப்
9. திரு. கே. கந்தசாமி
10. திரு. ஆர். மார்க்கபந்து.

இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். திரு. மு. அம்பிகாபதி இருக்கையில் இல்லை. அடுத்து திரு. சிவசாமி.

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட வெடி விபத்து துரதிருஷ்டமானது. நான்கு உயிர்களை அது எடுத்திருக்கிறது. இந்த மாதிரியான ஆபத்துக்கள் வரக்கூடாது என்பதற்காகத்தான் அரசாங்கம் இதற்கான லைசன்ஸ் கொடுக்கின்ற காலத்தில் இன்னின்ன இடத்தில்தான் வெடி மருந்துகள் உற்பத்தி செய்யவேண்டும் என்று சட்டதிட்டங்கள் எல்லாம் வகுத்திருக்கிறது. இதற்கு மாறாக சென்னையின் மத்தியில் இருக்கக்கூடிய முக்கியமான இடத்தில், கார்ப்பரேஷன் டவுனில் திருட்டுத்தனமாக லைசன்ஸ் பெற்றுக்கொண்டு வேறு ஓரிடத்தில் போய் இப்படி வெடி மருந்துகளை உற்பத்தி செய்திருக்கிறார்கள். இது எப்படி நடந்தது? ஏன் நடந்தது என்பதையெல்லாம் பார்த்தால், இது பல வருடங்களாக அங்கு நடந்து கொண்டிருப்பதும், இதில் பல பேர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதும் தெரிகிறது. இதையெல்லாம் அரசு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையில் விவாதிக்க வேண்டிய பொருள்கள் நிறைய இருப்பதால், நேரம் இல்லாத காரணத்தால், ஒருவர் சொன்னதையே அனைவரும் சொன்னதாக ஏற்றுக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தியாகராய நகரிலுள்ள கிரிபித் சாலையில் உள்ள முப்பாத்தம்மன் கோயிலில் தர்மகர்த்தாவாக திரு. கன்னியப்ப நாயக்கர் என்பவர் உள்ளார். இவருடைய வீடும், கோவிலும் ஒரே காம்பவுண்டில் உள்ளது. கோவளத்திற்கு அருகில் உள்ள செமமஞ்சேரியில் வாணங்கள் மற்றும் வெடிகள் தயாரிப்பதற்கு இவருக்கு உரிமம் கொடுக்கப்பட்டுள்ளது. இவர் நகரிலும், நகரைச் சுற்றி நடக்கும் கோவில் உற்சவங்களுக்கும், மற்ற விசேஷங்களுக்கும் வாணங்கள், வெடிகள் கொண்டு தருவார். இவருக்கு வாணங்கள், வெடிகள் தயாரிக்க உரிமம் செம்மஞ்சேரியில் இருந்தபோதிலும், இவர் கோவில்களுக்கும் மற்றும் இதர நிகழ்ச்சிகளுக்கும் விநியோகம் செய்ய கிரிபித் சாலையில் உள்ள தன்னுடைய வீட்டிற்குக்கொண்டு வந்து வைத்திருப்பது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. கிரிபித் சாலையிலுள்ள இவரது வீட்டில் வாணங்கள், வெடிகள் வைத்திருக்க உரிமம் இவருக்கு இல்லை. வாணங்கள், வெடிகள் செய்வதற்குத் தேவையான குழாய்கள் போன்றவற்றை இவருடைய வீட்டில் தயாரிப்பது வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. இவருடைய வீட்டை ஒட்டி ஒரு கொட்டகையும் உள்ளது.

3-4-78 அன்று காலை சுமார் 9.15 மணி அளவில் மேற்படி இடத்தில் பெரிய வெடி விபத்து ஏற்பட்டு, புகை கிளம்பியது. ஓலை வேய்ந்த கொட்டகைக்குள் மற்றவர்கள் செல்வதற்கும் அங்கிருந்த பாலன் (18 வயது), ரங்கநாதன் (25 வயது), நசீர் அஹமது (30 வயது), அப்துல் ரஹ்மான் (29 வயது) ஆகிய நால்வரும் தீயில் கருகி இறந்து விட்டனர். தீ விபத்து பற்றிய தகவல் கிடைத்ததும் 7 தீயணைப்பு வண்டிகளும், 2 ஆம்புலன்ஸ் வண்டிகளும் விரைந்து சென்று பொதுமக்கள் உதவியுடன் தீயை அணைத்தனர். தீயை அணைப்பதற்கு 1 மணி நேரம் பிடித்தது.

திரு. கன்னியப்ப நாயக்கர் விபத்தில் இடது காலில் காயமடைந்ததின் காரணமாக ராயப்பேட்டை அரசு மருத்துவ மனையில் சேர்ந்துள்ளார். இவர் கைது செய்யப்பட்டு, ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இவர் மீது இ. பி. கோ. 304 (எ) பிரிவின் கீழும். 5 (3) (பி) வெடிமருந்து சட்டத்தின் கீழும் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவம் பற்றி புலனறிய ஒரு துணை ஆய்வாளர் கொண்ட விசேஷ குழு அமைக்கப் பட்டுள்ளது. காவல்துறை ஆணையாளரும், துணை ஆணையாளரும் சம்பவம் நடந்த இடத்தினைப் பார்வையிட்டுள்ளனர்.

இச்சம்பவம்பற்றி தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இச்சம்பவம் குறித்து விவாதிக்கப் பேரவையின் ஏனைய அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லையென தெரிவித்துக் கொள்கிறேன்.

[மாண்மிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத் தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்ற காரணத்தினால், இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

(ஆ) திருப்பூரில் நடந்த கலவரத்தால் எழுந்துள்ள கொந்தளிப்பான நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: 4-4-1978 அன்று திருப் பூரில் நடந்துள்ள கலவரம் காரணமாக எழுந்துள்ள கொந்தளிப் பான நிலைபற்றி விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப் பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர்:

1. திரு. சோ. அழகர்சாமி,

2. திரு. மு. அம்பிகாபதி,